සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

| | | |
|---|---|---|
| தரம் 06 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 12 T |
| சுட்டெண் ....................................... | **சைவநெறி** | **நேரம் 2 மணித்தியாலம்** |

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01. மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

1. ஓம் எனும் பிரணவ மந்திரப் பொருளாய் விளங்குபவர்.
   1. சிவன் 2. முருகன் 3. விநாயகர் 4. வீரபத்திரர்

2. சைவ நற்பழக்கங்களில் உள்ளது
   1. பொய்சொல்லல் 2. பெற்றோரை வணங்கல்
   3. மாமிசம் உண்ணல் 4. சுத்தம் பேணாமை

3. வீட்டில் இடம்பெறும் மங்களகரமான நிகழ்வுகளில் உள்ளது
   1. ஆண்டுத்திவசம் 2. வீட்டுக்கிருத்தியம்
   3. மரணச்சடங்கு 4. பிறந்தநாள் நிகழ்வு

4. பின்வருவனவற்றுள் சிவசின்னங்களாக விளங்குபவை
   1. சந்தனம், விபூதி 2. விபூதி, உருத்திராக்கம்
   3. குங்குமம், சந்தனம் 4. சந்தனம், உருத்திராக்கம்

5. உணவு உண்ணத் தொடங்கும்போது பாடப்படும் தேவாரம்
   1. சொற்றுனை வேதியன்............... 2. விநாயகனே வெவ்வினையை..............
   3. பித்தா பிறைசூடி...................... 4. அன்னம் பாலிக்கும்..............

6. ஏடுதொடங்கும் நிகழ்வு என்பது
   1. வித்தியாரம்பம் 2. சீமந்தம் 3. நாமகரணம் 4. சோறூட்டல்

7. "அரிது அரிது மானிடராதல் அரிது..." எனக் கூறியவர்
   1. ஔவையார் 2. நாவலர் 3. முருகன் 4. கிருஸ்ணன்

8. நாம் நல்ல நேரத்தை கணிக்க பயன்படுத்துவது
   1. கணிப்பான் 2. பஞ்சாங்கம் 3. நாட்காட்டி 4. தினக்குறிப்பு

9. திருவாசகம் பாடியவர்
   1. சம்பந்தர் 2. அப்பர் 3. மாணிக்கவாசகர் 4. சுந்தரர்

10. விநாயகருக்கு மிகவும் விருப்பமானது
    1. அறுகம்புல் 2. மானாப்புல் 3. சோளம் 4. மஞ்சள்

**02. பின்வரும் கூற்றுகள் "சரி" யாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் எழுதுக.**

11. விநாயகரை வழிபட்ட பின்பே எக்காரியத்தையும் தொடங்க வேண்டும். ( )

12. நாமகரணம் என்பது சோறூட்டல் ஆகும். ( )

13. ஏடு தொடங்குவதற்கு விஜயதசமி ஏற்ற நாளாகும். ( )

14. அகத்தியரின் கமண்டல நீர் காவிரியானது. ( )

15. நரகாசுரன் என்ற அசுரனை முருகப்பெருமான் அழித்தார். ( )

**03. இடைவெளி நிரப்புக.**

(பிள்ளையார் சுழி, திரிபுண்டரம், சமயவிழுமியங்கள், சித்திரை, பாலபாடம்)

16. ஆறுமுகநாவலர் சிறுவர்களுக்காக ............................. எழுதினார்.

17. சமயம் சார்ந்த நற்பண்புகள் ....................................... எனப்படும்.

18. சைவசமயத்தவரின் புதுவருடப்பிறப்பு ................................... மாதத்தில் கொண்டாடப்படும்.

19. எழுதத் தொடங்கும்போது .............................................. இட்டு எழுதுவது நம் வழக்கமாகும்.

20. மூன்று குறிகளுடன் விபூதி தரிப்பது .............................. ஆகும்.

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. பின்வரும் திருப்பாடல்களில் ஒன்றை மட்டும் வரிப்பிழையின்றி எழுதுக.
    1. உலகெலா முணர்ந்து................
    2. விநாயகனே வெவ்வினையை..........
    3. தோடுடைய செவியன்..............
    4. பித்தார் பிறை சூடி..............

02. 1. பிள்ளையாருக்கு வழங்கப்படும் மறுபெயர்கள் இரண்டு தருக.
    2. பிள்ளையாரின் வாகனம் எது?
    3. பிள்ளையாரை வணங்கும் முறை ஒன்று தருக.

03. 1. சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள் யாவர்?
    2. தோத்திரங்களை ஓதுவதற்கு முன்பம் ஓதிய பின்பும் யாது கூற வேண்டும்.
    3. பஞ்சபுராணங்கள் எவை?

04. 1. திருமுறைகளைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர்களைத் தருக.
    2. திருமுறைகளை ஓதும் முன்பும் ஓதிய பின்பும் "திருச்சிற்றம்பலம்" கூறுவது ஏன்?
    3. தேவாரம் பாடிய நாயன்மார்கள் மூவரினதும் பெயர்களைத் தருக.

05. 1. இந்துப் பண்டிகைகள் மூன்று தருக.
    2. பண்டிகை கொண்டாடப்படுவதால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக.
    3. விரதம் என்றால் என்ன?

06. 1. சைவ சமயத்தவர்களின் வாழ்வுடன் தொடர்புறும் சடங்குகள் எவ்வாறு அழைக்கப்படும்?
    2. நம் வாழ்வுடன் தொடர்புடைய மங்கள கருமங்கள் இரண்டு தருக.
    3. குழந்தைகளுக்கு காதுகுத்தல் நிகழ்த்த சிறந்த நாள் எது?

07. பின்வருவனவற்றுள் எவையேனும் ஒன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
    1. விநாயகர்
    2. திருமுறைத் தொகுப்பு
    3. பண்டிகைகள்
    4. சைவ இல்லம்

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 06 - சைவநெறி**
**விடைப்பத்திரம்**

**பகுதி I**

01.
1. 3
2. 2
3. 4
4. 2
5. 4
6. 1
7. 1
8. 2
9. 3
10. 1

02.
1. சரி
2. பிழை
3. சரி
4. சரி
5. பிழை

03.
1. பாலர்பாடம்
2. சமய விழுமியங்கள்
3. சித்திரை
4. பிள்ளையார் சுழி
5. திரிபுண்டரம்

**பகுதி I**

01. பாட நூலில் பார்க்கவும்

02. 1. விநாயகர், ஐங்கரன், ஆனைமுகன், கணபதி
2. பெருச்சாளி
3. பிள்ளையாருக்கு முன் சிதறு தேங்காய் உடைத்தல்,
நெற்றியில் குட்டிக்கும்பிடுதல், தோப்புக்கரணம் போடுதல்

03. 1. சைவர்கள் / சைவ சமயத்தவர்கள்
2. திருச்சிற்றம்பலம்
3. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்.

04. 1. தொகுத்தவர் - நம்பியாண்டார் நம்பி
தொகுப்பித்தவர் - இராஜராஜ சோழன்
2. திருமுறைகள் தில்லைச்சிற்றம்பலத்தில் கண்டெடுக்கப்பட்டதை நினைவுகூறும் முகமாக கூறப்பட்டது.
3. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்.

05. 1. தைப்பொங்கல், சித்திரை புதுவருடப்பிறப்பு, தீபாவளி
2. இறை சிந்தனை ஏற்படல், மனநிறைவு பெறல், பகிர்ந்துண்ணல் ஒற்றுமை, நற்காரியங்கள் தொடங்கல், கலை நிகழ்ச்சிகள் நடாத்தல்.
3. மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் முக்கரங்களால் கடவுளை மெய்யன்போடு விதிப்படி வழிப்படல்.

06. 1. வாழ்வியல் சடங்குகள்
2. பெயர் சூட்டுதல், காது குத்தல், சோறூட்டல், ஏடு தொடக்குதல்
3. தைப்பூச நாள்.

07. சிறு குறிப்புகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்